www.padippakam.com

சமூக விஞ்ஞானப் பயிலகத்தின் கலை இலக்கிய இதழ்

# புதிய தடம்

இதழ் எண்-4

மார்ச் 1999



'ஃபயர்' படத்தில்...

| தனிச் சுற்றுக்கு | நன்கொடை ரூ.8.00 |
|---|---|

தமிழ் சிற்றிதழ்கள் சங்க உறுப்பிதழ் பதிவு எண்: 213/01/99

படிப்பகம்

www.padippakam.com



பயிலுவோம்! பயிற்றுவிப்போம்! தலைமைக்குயர்த்துவோம்!

தலையங்கம்

# ஜாக்கிரதை! இது ஜனநாயக நாடு!!

எல்லோரும், எல்லாமும் பெறவேண்டும் இங்கு இல்லாமை இல்லாத நிலைவேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் (!) வெகு சிரமங்களுக்கிடையேயும் ஜனநாயகத்தை(?) கட்டிக்காத்துக் கொண்டிருக்கிற ஆட்சியாளர்கள் நிரம்பியது நமது நாடு. அவ்வப்போது இங்கு சில பாதிரிமார்கள் எரித்துக் கொல்லப்படலாம், சில மசூதிகள் இடித்துத் தள்ளப்படலாம், ஆனாலும் என்ன இது ஜனநாயக நாடல்லவா? ஜனநாயகம் என்றாலே இதெல்லாம் சகஜம்தானே?! ஜனநாயகம் கோரி குரலெழுப்புபவர்கள் கொல்லப்படுகிறார்கள். 'இப்படிக் கொல்லப்படுபவர்களுக்காக இரங்கல் கூட்டம் நடத்தும் உரிமை நமக்கிருக்கிறது'. எனவே இது ஜனநாயக நாடுதான்' என்று, இடதுசாரிகள் என்று சொல்லப்படும் இந்தியாவின் போலி கம்யூனிஸ்ட்டுகள் அழுத்தம் திருத்தமாக வாதிடுகிறார்கள். மருமகள் கொல்லப்பட்ட விஷயத்தை மூடி மறைக்க மகன் திணறும்போது சில மாமாக்கள் பூசி மெழுகுவது சகஜம்தானே? சொல்லப்போனால் நாம் உலகின் மிகப்பெரும் ஜனநாயக நாட்டின் குடிமக்களல்லவா?

ஜனநாயகத்தை கட்டிக் காக்கும் பாதையில் நடைபோடும் போது நூறு கோடி மக்கள் ஒடுக்கப்படுவதும், இந்தியாவின் பொருளாதார நலன்கள் வல்லரசுகளுக்குக் கூட்டிக் கொடுக்கப்படுவதும் இயல்புதானே? இதையெல்லாம் சகித்துக் கொண்டுதான் மக்கள் போகவேண்டும், விடாப்பிடியாக எதிர்த்தால் சாகவேண்டும் (கொலை செய்வோம்) என்று நமது ஜனநாயகம் சொல்கிறது. என்ன? ஜனநாயகம் பொய்யா சொல்லும் ? அது சொன்னால் சரியாகத்தானே இருக்கும்?

ஆகவே... கொடூரமாக கொல்லப்பட்ட தலித்துகளுக்கு இரங்கல் கூட்டம் நடத்தும் ஜனநாயகத்தை நமக்களித்த ஆட்சியாளர்களை வாயார வாழ்த்துவோமாக.

ஆமென்.

தோழமையுடன்

**(புதிய தடம்)**

சமூக விஞ்ஞான பயிலகம்,

தமிழ்நாடு.

படிப்பகம்

www.padippakam.com



# கவிதைகள்

துரோகம்
வஞ்சனைகளால் கட்டப்பட்டது
உனது தேகம்.
போலித்தனங்களால் ஆன நீ
சமூகத்தை மாற்றியமைக்கப்போவதாகச்
சொல்கிறாய் - உன்னைப்பார்க்காமல்!
நாங்கள் கீழ்ப்படிவதால்
உனது ஆதிக்கம் தலைதூக்குகிறது.
நாங்கள் தலைதூக்கும்போது
உனது ஆதிக்கம்
உடைத்தெறியப்படும்.

**-இளையமுருகன்**

பாப் கட்டிங் விரும்பிய
மேட்டுக்குடிப் பெண்கள்
நீண்ட கூந்தலைச்
சீவி எறிந்தனர்.
குறவர்கள் விற்ற சவுரிமுடியை
எம் தெருப் பெண்கள் வாங்கினர்.
வல்லரசுகள்
புணர்ந்து எறிந்த
ஆணுறைகளை வாங்கிப்
புணர்ந்து
தீர்த்தோம்.

**-மேகவண்ணன்.**

## நாங்கள் முற்போக்கானவர்கள்

எப்படியும் சாகலாம் என்ற சலுகையை
சனநாயகம் என்றுகூறி ஒட்டுப்
பொறுக்குவோம்
ஏனெனில் நாங்கள் முற்போக்கானவர்கள்.

ஒடுக்குதலுக்கெதிராய் நிமிர்பவன் உதிரம்
சாக்கடையில் கலந்தோட
அதில் மீன் பிடித்து உண்போம்
நாங்கள் முற்போக்கானவர்கள்.

மிதிக்கப்படுபவர்களின் ஓலங்கள்
செவியைக் கிழிக்க
நாங்கள் இலக்கியவிழா நடத்துவோம்
ஏனெனில் நாங்கள் முற்போக்கானவர்கள்.

உரிமைகோரும் பேனாக்கரங்கள்
துண்டிக்கப்பட
முன்னேறும் கால்கள் வெட்டப்பட
நாங்கள் சலுகை கோரும்
பேரணிகள் நடத்துவோம்.

வெண்படை
மக்களைக் கொன்று குவித்த
சுடுகாட்டில் சென்று
சோசலிசம் அமைப்போம்
ஏனெனில் அப்போதும் நாங்கள்
முற்போக்கானவர்களே!

**-கனல்**

படிப்பகம்

www.padippakam.com



கவிதை

## பெண்ணென்றால்...

●

நேற்று தாயின் பின்னால்
இன்று என் பின்னால்
அல்லது உன் சகோதரியின் பின்னால்
நாளை மகளின் பின்னால்
இல்லை எப்போதும் ஏதோ ஒரு
பெண்ணின் பின்னால்
ஒளிந்து கொள்வாய் நீ.
ஏன்?
பெண் என்றால் பேயும் இரங்கும்
என்றார்களே உனது தாத்தனும்
அப்பனும் அதனாலா?
கேடயமாக எங்களை நிறுத்தி
யாரை ஏய்க்க நினைக்கிறாய்?
முதலில் உன்னைத்தானே!
ஏ ஆணாதிக்க வெறியனே
முதுகெலும்பற்ற கோழையே
நீ செத்தால் எங்களில் யாரும்
உன் உடன் கட்டையேறப்போவதில்லை.
சுயசிந்தையில்
வரலாற்றில் இதுவரையாரும்
ஏற்றியதுமில்லை.
ஆனால் ஏற்றியது
உங்கள் சனாதனம்.

ஏ புதிய சனாதனி
உனது போராட்டம்
எனது போராட்டமாக
இருக்கும் பட்சத்தில்
நாங்கள் ஏன் தடுக்கப் போகிறோம்
உன்னை?

நீ கேட்டதில்லையா
தெலுங்கானா வரலாறு?
படித்ததில்லையா
காாக்கியின் தாய்?

நிஜாமுக்கு எதிராக
கொடுங்கோலன் ஜார்-க்கு எதிராக
போராடிய நாங்கள்
பெண்கள் இல்லையா?

ஆந்தித்து மண்ணில்
யூனியன் ராணுவ மிருங்களால்
கிழிபட்டது எங்கள்
யோனிகள் இல்லையா?
குதறப்பட்டவை எங்கள்
மார்பகங்கள் இல்லையா?
இத்தனை கொடுமைகளுக்குப்
பின்னும்
நாங்களா சொன்னோம்
'புரட்சிப் போரினை நிறுத்து' என்று.

நிறுத்தியது உனது
திரிபுவாத 'மாமன்கள்' அல்லவா?

இங்கு
அதுதான் பிரச்சினை!
முதலில் நீ
உறுதியோடிருக்கிறாயா?
அவமானங்களுக் கெதிராகப்
போரிட,
உன்னை இழக்க.

படிப்பகம்

www.padippakam.com



தாயை
தங்கையை
மனைவியை
மகளை
வீடுவாசலைக் காட்டி
எதிரிகள் அச்சுறுத்தலாம்.

அவர்களுக்கு நாங்கள்
ஓர் ஆணின்
அசையும் சொத்துக்கள்.
ஆனால் உனக்கு!
அதுதான் பிரச்சினை.

எங்களை உனது சொத்தாக
நினைப்பதுதான் பிரச்சினை.
உன் தோளில் சுமக்கும்
மணல் மூட்டையாய்
எங்களை நினைப்பதுதான்
பிரச்சினை.
எங்களுக்கு விருப்பமில்லை
கல்லாய், மண்ணாய்,
மரமாய் இருப்பதில்–
உனக்குச் சம்மதமா?
நான் மனுஷியாக இருப்பதில்,
வெறும் பெண் குறியாக
இல்லாதிருப்பதில்?

கங்கைப் பெண்ணை
தலையில் சுமப்பதான
கற்பிதத்தில்
சிவனுக்குப் பெருமை.

எங்களைச் சுமையாக
நினைப்பதில்
உனக்குப் பெருமை.
யாரும் யாரையும்
சுமக்க வேண்டாம்
உனக்குச் சம்மதமா?[illegible]
[illegible]

[illegible]
[illegible]
யாரும் யார் தோளிலும்
ஏறி அமரவேண்டாம்-இருக்க
உன்னால் முடியுமா?
எங்களது பெயரால்
உனது உடலை
உயிரை
சொத்து
சுகத்தை
காத்துக் கொள்கிறாய்

'போராளி' என்பவன்
தன் உயிரை மட்டுமல்ல
தனக்குப் பிரியமானவரையும்
இழக்கத் துணியவேண்டும்.
நீ தயாரா?
முதலில் உன்னை இழக்க
எங்களிடம் கேட்டாயா?
நாங்கள் மறுத்தோமா?
ஒரு வேளை மறுத்தாலும்
மறுக்கும் குரலுக்குள் ஒளிந்திருப்பது
நீயல்லவா?
அதாவது
ஆணாதிக்க நீட்டிப்பு
பெண்ணடிமைத்தனமல்லவா?
ஒடுக்கப்பட்டவர் - அதனை
உணர்ந்தவர்
எவரும் மறுப்பதில்லை
'போரிட - இழக்க'.
இழக்க ஒரு பெண்ணும்
சாதிப் பெருமையும்
உனக்கிருப்பதாக நினைக்கும் வரை
நீ
'பாட்டாளி' அல்ல
அதனால்
நீ
'போராளி'யும் அல்ல.

-நரசிம்மம்

www.padippakam.com



திரை விமர்சனம்

# FIRE

**கனல்**

சினிமாவில் இப்படியும் ஒரு வகை உண்டு.
நிஜவாழ்வின் அவலங்களை, யதார்த்தத்தை அப்படியே காட்டுவது, இதன் மூலம் அறிவுஜீவி வர்க்கம் தன் உணர்ச்சிகளுக்கு வடிகாலாகவும் அதே சமயம் லாபமும் அடைவதுண்டு.

ஒட்டுப் பொறுக்கிகளின் ஏவல்நாய்களாக விளங்கும் பிற்போக்கு மதவாத அமைப்புகளாலும் அவர்களின் ஆசனவாயாக விளங்கும் (குப்பைகளளை மக்கள் தலையில் கட்டும்) பத்திரிகைகளினாலும் சர்ச்சை கிளப்பப்பட்ட FIRE என்னும் ஆங்கில / ஹிந்தி மொழிப் படம் ஒரு சமீபத்திய உதாரணம். இப்படத்தில் தத்தமது வாழ்க்கைத் துணையால் கிடைக்க வேண்டிய அன்பும், ஆதரவுப் பரிமாற்றமும் கிடைக்கப் பெறாத இரு பெண்கள் அவற்றை தங்களிடையே பரிமாறிக்கொண்டு படுக்கை வரை செல்கிறார்கள். இப்படத்தின் மூலம் இயக்குநர் பெண்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுமாறு ஆண்வர்க்கத்திடம் கேட்கிறார்.
நவகாலனிய நாடான இந்தியாவில் (சமூக ஏகாதிபத்தியமான சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு) இதுபோன்ற கலாச்சார சிந்தனைகள் இறக்குமதியாவது தவிர்க்க இயலாதது. மேலும் இப்படத்தில் நடக்கும் சம்பவங்கள் நாட்டில் நடக்காதவை அல்ல. அவற்றை இப்படம் பகிரங்கப்படுத்துகிறது.
அடிமையின் அடிமையாக, மிருகங்களாக நடத்தப்படும் பெண்களை மனிதர்களாக நடத்துமாறு கேட்கப்படுகிறது.
தன்னைத் தக்க வைத்துக்கொள்ளும் இந்திய ஆணாதிக்க பிரபுவர்க்கம் இப்படத்தை எதிர்ப்பது இயல்பே. தன்னுடைய கோரமுகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்ள யாரும் தயாரில்லை.
மேலும் இப்படத்தில் சில விஷயங்கள் காட்டப்படுகிறது.
இதில் ஒரு பெரும்பான்மை மதத்தைச் சேர்ந்தவர்களாகக் காட்டப்படும் பிரதான பெண் பாத்திரங்கள், அம்மதக் கடவுளிடம் பக்திமானாகக் காட்டிக்

படிப்பகம்

www.padippakam.com



கொள்ளும் மனிதர்களின் தனிப்பட்ட செய்கையில் வெறுப்புற்று பிறமத ஆலயத்துக்குச் செல்வதாக மனோதத்துவ ரீதியாக காட்டப்படுகிறது.

மேலும் இதில் வரும் பெண் பாத்திரங்களுக்கு தெய்வங்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. முக்கிய நடிகை சிறுபான்மை மதத்தைச் சேர்ந்தவர்.

இது பிற்போக்கு மதவாத சக்திகளின் காட்டுமிராண்டிப் பார்வைக்கு ஒரு பெரும்பான்மை மதத்தை இழிவுபடுத்துவது போலவும் தென்படுகிறது.

ஒட்டுப் பொறுக்குவதற்காக ஊட்டி வளர்க்கப்பட்ட மதவெறி, மற்ற சமயங்களில் அடங்க மறுப்பதால் இதுபோன்ற கலை, கலாச்சார வடிவங்களின் மீது பாய்கின்றது.

வெறும் பொருளாதார விடுதலை மட்டுமின்றி, வர்க்க விடுதலையும் அடையும்போது மட்டுமே ஆண், பெண், அனைத்து மக்களுக்கான பிரச்சினைகளும் தீர்க்கப்படும்.

சுரண்டலற்ற, வர்க்க பேதமற்ற, ஆண்-பெண் பேதமற்ற ஒரு சோசலிச அமைப்பில் மட்டுமே அனைத்து மனிதர்களும் தோழமையுடன் நேசித்து அன்பு கொண்டு உண்மையான மகிழ்வடைவர் என்பதே விஞ்ஞான உண்மை.

அதுவரை இதுபோன்ற படங்களும், சர்ச்சைகளும் அவ்வப்போது வந்து கொண்டே இருக்கும்.

**-கனல்**

## குறுங்கவிதைகள்

- **கம்யூனிஸ்டுகளின் கலை இரவு**
  **SPONSORED BY**
  **உள்ளூர் நிலப்பிரபு.**

- **ஹைக்கூ**
  **பொருளாதாரத்தில் அமெரிக்க அடிமை**
  **சிந்தனையில்**
  **ஜப்பானின் அடிமை.**

- **ஹைக்கூ**
  **காலைச் சிறுக்கும்**
  **செருப்பு.**

**-கனல்**

www.padippakam.com



## சமாதானம் பற்றிய ஒரு அநீதிக் கதை

முதல் முதலாக
ஓநாய்கள் ஆட்டுக்குட்டிகளைக் கவர்ந்த போது
சமாதான விரும்பிகள் ஒன்றுகூடி
ஏகமனதாக
ஓநாய்களைக் கண்டித்துத்
தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

ஓநாய்கள் மீண்டும் ஆட்டுக்குட்டிகளை கவர்ந்த போது
சமாதான விரும்பிகள்
நீண்டநேரம் தம்முள் விவாதித்து
மீண்டும் ஏகமனதாக
ஓநாய்களைக் கண்டித்துத்
தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

ஓநாய்களும்
விடாது ஆட்டுக்குட்டிகளைக் கவர்ந்து வந்தன.
சமாதான விரும்பிகளும்
தளராது
தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

ஆடுகள் ஒன்று திரண்டு ஓநாய்களை எதிர்த்தபோது
சமாதான விரும்பிகள்
மீண்டும் கூடிப்
போரை எதிர்த்துத்
தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

ஆடுகள் தமது கொம்புகளை பிரயோகித்ததில்
ஓநாய் ஒன்று கொல்லப்பட்ட போது
கொம்புளால் தாக்குவது
யுத்த விதிகட்கு முரணானது எனவும்
பற்களையும் நகங்களையும் விட வேறெதையும்
பாவிப்பது

படிப்பகம்

www.padippakam.com



அநாகரீகமானது எனவும்
சமாதான விரும்பிகள்
புதிய தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்
ஆடுகட்குப் பற்களாற் போர் புரியத் தெரியாததாலும்
தமது குளம்புகள் மொட்டையானவை என்பதாலும்
கொம்புகளாலேயே போரிட்டன.

சமாதான விரும்பிகட்குப்
போரை நிறுத்த வழி தெரியாததாலும்
தீர்மானங்களை நிறைவேற்றுவதைவிட
வேறேதும் இயலாததாலும்
ஆடுகளின் அநாகரிகமான போர்முறையைத்
தொடர்ந்து கண்டித்துத்
தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

ஓநாய்கள்
சமாதானத்துக்கு உடன்படாவிட்டாலும்
ஆடுகள் அநாகரிகமானவை என்று கூறி
அவற்றை அண்டுவதை நிறுத்தின.

சமாதான விரும்பிகள்
ஆடுகளின் அநாகரிகமான நடத்தையை
இன்னமும் மன்னிக்க மறுக்கிறார்கள்.
ஆயினும்
ஆடுகள் பாதுகாப்பாக உள்ளன.

●

-சி. சிவசேகரம்

'போரின் முகங்கள்' கவிதைகள்
வெளியீடு : தேசிய கலை இலக்கிய பேரவை
14,15 வது சந்து,
கொழும்பு-06. சிறிலங்கா.
விலை ரூ.40-00 பக்கம் 31
1996 ஜூலை.

படிப்பகம்

www.padippakam.com



நூல் விமர்சனம் மேகவண்ணன்

## பசியும் எரியும்
(கவிதைத்தொகுதி)

ஆசிரியர் - **தீபன்**

' கவிஞனின் வேலை கவிதை எழுதுவது மட்டுமன்று : சமூக மாற்றத்திற்காகப் போராடுவதும்தான் '

என்கிற மாவோவின் மொழியுடன் தொடங்குகிறது தீபனின் இத்தொகுப்பு. மக்களுக்கான கலை இலக்கியப் படைப்புகளை வழங்கவேண்டும் என்கிற முனைப்புடன் எழுதிக் கொண்டிருப்பதாக முன்னுரையில் சொல்லும் தீபனின் கவிதைகள் ஒரு போராளியின் ஆயுதமாக பரிமளித்திருக்கிறதா? என்பதைக் கவனிப்போம்.

முன்னுரையில் மூன்று புரிதல்களை வைக்கிறார்.

1. விஞ்ஞானம் - பூமியை வெடிக்க அணுகுண்டு தயாரிக்கிறது.
2. அரசியல் - கொள்ளையடிப்பதைக் கூடிக்கூடி பாராளுமன்றத்தில் விவாதிக்கிறது.
3. இலக்கியம் - அதிகார வர்க்கத்தின் ஏவளாளாகச் சிறுமைப்படுகிறது.

இந்தியச் சமூக அமைப்பு பற்றிய விமர்சனமாக இம்மூன்று குறிப்புகளையும் தீபன் வைப்பாராகில் இலக்கியம் - அதிகார வர்க்கத்தின் ஏவலாளாகச் சிறுமைப்படுகிறது என்பது உண்மையே. கலையும், இலக்கியமும் மக்களுக்கே என்று உறுதியோடிருக்கிற தீபன் அதிகார வர்க்கத்தின் ஏவலாளாகச் சிறுமைப்படுகிற எழுத்தை எப்படி இலக்கியம் என்று ஏற்கிறார்?

விஞ்ஞானம் பூமியை வெடிக்க அணுகுண்டு தயாரிக்கவில்லை. அது விஞ்ஞான வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் ஆட்சியதிகாரத்தைக் கையில் வைத்திருக்கின்ற அதிகார வர்க்கத்தினரின் பொருளாதார மேலாண்மை என்ற நோக்கோடு பின்னிப் பிணைந்தவை.

படிப்பகம்

www.padippakam.com



தொகுப்பில் உள்ள நல்ல கவிதைகளில் ஒன்றான,

சந்தை

●

அலங்காரப் பதுமையாக
அதிராமல் நடந்து வந்தேன்.
அதற்காகச் சிறப்பு மதிப்பெண்.
தேநீர்க் கோப்பையைக் கொடுத்து
காலில் விழுந்தேன்
என் சுயமரியாதையின் கழுத்தில்
சுருக்கு.

கொதிக்கக் கொதிக்கக் குடித்தான்
அந்த இளைஞன்
என்னைப் பார்த்துக் கொண்டே...
அவன் பார்வை
பாகம் பாகமாய் எடைபோட்டு
நோக வைத்தன
அத்தனை பேர் நடுவில்...
நான் குன்றிப் போனேன்.

வெட்கம் என்றார் ஒரு
வேதாந்தி.
பின் என்னென்னவோ பேசினார்கள்.
என் தந்தையும்
அவன் தந்தையும்
சம்பந்தி ஆனார்கள்
என்னைக் கேட்காமலேயே!

பெண்ணை ஒரு மனுஷியாகக் கருதாமல் ஓர் உடமைப் பொருளாக விற்பனைக்கும், கொள்முதலுக்கும் உட்படுத்தும் நிலப்பிரபுத்துவ சமூக அடித்தளத்தின் கோர முகத்தை ஒரு பெண்ணின் உணர்வு நிலையிலிருந்து தீபன் இக்கவிதையில் நன்றாகச் சொல்லியிருக்கிறார். மகளிர் சிந்தனையில் இக்கவித்தை பிரசுரமானது என்ற குறிப்பும் இருக்கிறது. அதுபோல இதழ்களின் தன்மைக்கேற்ற கவிதைகளையும் தீபன் வலிந்து எழுதியதாகக் கருத இடமளிக்கிறது.

கீழ்க்கண்ட சில கவிதைகள்
விளிச் சொற்கள் - செம்மலர்
இருப்பு - சுகன்
சாதி! சதி! தீ! - மாற்றம் / மனித உரிமை முரசு.
என்று தொடர்கிறது...

www.padippakam.com



ஒரு கவிஞராக தன்னை அடையாளப்படுத்திக்கொள்வதற்காக தீபன் எழுதிய கவிதைகளைவிட அரசியல் ரீதியாக தற்போது அவர் வகிக்கும் இடத்தையும், பாத்திரத்தையும் பிரதிபலிக்கும் முகமாகவே கவிதைகளை தொகுப்புக்காகத் தேர்வு செய்துள்ளார்.

'முணுமுணுப்புகள்!' என்றொரு கவிதையில் தீபன்

' ஓசோனில் ஓட்டையாம்
அலறுகிறார்கள்
கான்கிரீட் வீடுகளில்
கவலையற்றிருப்பவர்கள்.'

என்றெழுதுகிறார். கான்கிரீட் வீடுகளில் குடியிருப்பவர்களை ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள சிதைவுகள் ஏதும் செய்யாது என்ற தவறான கருத்தை அவர் கொண்டிருப்பது நமக்குப் புரிகிறது. உண்மை அதுவல்ல, புவியின் சூழல் கேடுகளால் சிதையும் ஓசோன் எனும் இயற்கைப் பாதுகாப்புப் படலம், அதன் அதிவெப்பமுள்ள புற ஊதாக் கதிர்கள் கான்கிரீட் கனவான்களை மட்டும் விட்டு வைத்துவிடப் போவதில்லை.

பசி, வறுமை, போராட்டம், காதல், பெண்ணியம், தீண்டாமை, விரக்தி ஆகிய தளங்களில் அதன் படிமங்களிலும் இயங்குகிற தீபனின் கவிதைகள் ஆங்காங்கே எதார்த்தத்தைச் சரியாகப் பதிவு செய்கின்றன. அப்படிப்பட்ட கவிதைகளையே இத்தொகுப்பின் வாசிக்கத்தகுந்த கவிதைகளென கீழ்க்கண்டவாறு பட்டியலிடலாம். கயிறு, சந்தை, சாதி சதி தீ, வேட்டை, மண், சில குறிப்புகளும்...., நீதிமன்ற வாசலில் ஒரு தேநீர்க்கடை.

பசி எரிவதற்காக மட்டுமல்ல, பசியின் எரிபொருள் என்பது உணவே. பசியைப் போக்காத, பசியின் இருப்பை ஸ்தாபிக்கும் சுரண்டலையும், அடக்குமுறையையும் அதன் உள்ளீடாக இயங்குகிற ஜனநாயகமற்ற சமூகச்சூழலையும் எரிக்கும் பந்தங்களாக பசி உருவெடுக்க வேண்டும்.

தானே எரிந்து காட்சிப் பொருளாக மாறி அழிந்து போவதற்கல்ல பசி. அது உணவைப் பிடுங்குபவர்களின் வாழ்வையும் சேர்த்துப் புரட்டிப் போட வேண்டிய ஒரு கடமையின் அடையாளம்.

' பழகியவனுக்கு கவிதையும் ஆயுதம் ' என்ற நம்பிக்கையுள்ள தீபன் நிகழ்காலச் சமூக வாழ்வின் அவநம்பிக்கைகளைத் துறந்து ஆற்றலான, நம்பிக்கையூட்டும் எதிர்காலத்திற்கான புரட்சிகரக் கவிதைகளை எழுதவேண்டும் என்பதே இவ்விமர்சனத்தின் தேவையும், நோக்கமும்.

**பசியும் எரியும் - *கவிதைகள்***

**-தீபன்**

பக்கங்கள் -32, விலை. ரூ. 7.00,

*112, பூபதி நகர், ஆற்காடு - 632 503. வேலூர் மாவட்டம்.*

படிப்பகம்

www.padippakam.com



## கடிதங்கள்

தேசிய கீதம் விமர்சனம் விரிவாய் இருந்தும் கூர்மையான சிலவற்றைத் தவறவிட்டிருக்கிறது.

காந்தியத்துக்கும், மார்க்சியத்திற்குமான பாத்திரங்களை உலவவிட்டு இறுதியில் மார்க்சீயம் விழவேண்டியது, காந்தியமே இம்மண்ணைக் காக்க வல்லது என்பதாக சித்தாந்த ரீதியிலான கண்ணோட்டத்தை வைக்கிறது இப்படம். மேலும் இதன்மூலம் முதலாளித்துவவாதிகளுக்கு விடப்படும் முன் எச்சரிக்கை போலவும் தொனிகிறது. இந்த வர்க்க அரசியல் முக்கியமானது -சேரனைக் கணிக்க,சக்திமான், கிரிக்கெட், சரஸ்வதி வந்தனம் மூன்று கட்டுரைகளும் தேவை கருதிய வெளியீடு. நன்றி.

- **தீபன்**, ஆற்காடு.

புதியதடம் 3, வாசிக்கக் கிடைத்தது. ஒவ்வொரு பக்கமும் சிறப்பாகவே இருக்கிறது. அட்டைப்படம் அருமையான முறையில் அமைந்துள்ளது. குமரன்தாஸ் அவர்களின் கிரிக்கெட் பற்றிய கட்டுரை சிறப்பாக இருந்தது. கிரிக்கெட் மீது எனக்கேற்பட்டுள்ள வெறுப்புணர்ச்சிக்கு சரியான காரணங்களைச் சொல்லித்தந்தது.

கிரிக்கெட் போதையில் தள்ளாடும் இளைய சமுதாயம் அந்தக்கட்டுரையை படிப்பதன் மூலம் தெளிவு பெற முடியும்.

தேசியகீதம் விமர்சனம் இன்னும் சிறப்பாகச் செய்திருக்கலாம். சேரன் காந்திய சிந்தனைக்குட்பட்டவர் என்பதே தவறு. அவர் 'காவி' சிந்தனையாளர் என்பது தேசியகீதம் மூலம் தெளிவாகியுள்ளது. கூர்ந்து நோக்கவும். திரை விமர்சனம் இன்னும் விரிவான, தெளிவான நிலையில் செயல்பட வேண்டும். மேகவண்ணனின் 'வேஷம்' கவிதை பாராட்டும்படி உள்ளது. இன்றைய ஆட்சியாளர்களுக்கும், அடி வருடிகளுக்கும் சரியான சவுக்கடி.

-R.S.M. **ஹமீது**, ராமேஸ்வரம்.

சரஸ்வதி வந்தனம் - குறித்த கருத்துப்படம் நன்று. ஆனாலும் தாக்கத்தினை ஏற்படுத்தாத படம். ஒரு கலை இலக்கிய இதழ் தரும் கருத்துப்படம் 'சுரீர்' என உறைப்பதாய் இருக்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

தேசியகீதம் - திரைப்பட விமர்சனம் - நல்லதொரு ஆற்றலான விமர்சனம். படத்தில் முன்வைக்கப்படும் கருத்தியல்களின் முகமூடியைக் கிழித்து அதன் அரசியல் உள்ளடக்கத்தை வெளிக்கொணர்ந்து, படைப்பாளி எந்த வர்க்கத்தின் ஊதுகுழல் என்பதையும் வெளிப்படுத்துகிறது. தமிழ் இதழ்கள் முன்வைக்கும்

படிப்பகம்

www.padippakam.com



திரை விமர்சனத்தில், அதன் போக்கில் இருந்து விடுபட்டு, நிஜமான விமர்சனக் கூறுகளோடு ஆற்றலாய் விமர்சனம் தொடர்ந்து தந்து வருகிற புதிய தடத்தினை நாம் வாழ்த்துவோம். அதோடு மேலும் மேலுமாய் வளர்த்தெடுக்க வேண்டுவோம். மேற்குறித்த திரை விமர்சனக் கூறுகளோடு சின்னத்திரைத் தொடர் சக்திமான் - விமர்சனமும் நன்கு இயங்கியிருக்கிறது. இரு விமர்சகர்களுக்கும் நமது வரவேற்புகள்.

சிறப்புக் கட்டுரை - உண்மையிலேயே சீரிய கட்டுரையாய், ஏகாதிபத்திய விற்பனைக்கு அதன் மூலதனத் திரட்டலுக்கு முழுவதுமாய் உதவும் கிரிக்கெட் நிச்சயம் சமூக விரோதச் செயல்பாடுதான். சமூக மயமாகும் ஜனநாயக விரோதம்தான். மயக்குநிலைக் கருத்தியலிலிருந்த நிஜத்தை வெளிக் கொணர்ந்த கட்டுரையாளர் குமரன்தாஸுக்கு சிறப்பான வாழ்த்துக்கள்.

தற்போது பெரிதும் விவாதத்திற்குள்ளாகி இருக்கும் அர்ச்சனை மொழிப் பிரச்னைபற்றி நல்ல தீர்வினைத் தந்திருக்கிறார் கட்டுரையாளர். கடவுள், மொழியின் பெயரால் நிழல் சண்டை போட்டு தங்கள் தரகுப் பொருளாதார நலன் காக்கும் - ஓட்டு வங்கித் தந்திரம் - என முடிவு சொல்லும் நிஜத்தை கட்டுரை வெளிக் கொணர்கிறது.

மொத்தத்தில் உண்மை பளீரிடக்கிளம்பும் விமர்சனம், கட்டுரைகள், கவிதைகளோடு மிகச் சிறப்பாய் கூர்மையாய் 'புதிய தடம்' உண்மையிலேயே தமிழ் சிற்றிதழ் சூழலில் புதிய தடம்தான். சிறப்புக் கட்டுரையில் ஏகப்பட்ட அச்சுப் பிழைகள். இதை நிச்சயம் தவிர்க்க வேண்டும். கூடுதல் கவனம் செலுத்துங்கள். வாழ்த்துக்கள்.

- பாட்டாளி, திருச்சி.

மதவாதிகளும், மதச்சார்பின்மைவாதிகளும் மக்கள் விரோதிகளே என்று இருவரின் முகத்திரையைக் கிழித்தமைக்குப் பாராட்டுக்கள். மதவாதிகள் பாசிச இந்து ராஜ்ஜியத்தை நிறுவ நினைக்கிறார்கள். மதச்சார்பின்மை வாதிகள் திருவாசகத்தையும், தேவாரத்தையும், திவ்வியப் பிரபந்தங்களையும் பண்டார சன்னிதிகளைக் கொண்டு வேறொரு ' பார்ப்பனர்களை' நிறுவி ஓட்டுவங்கியைப் பாதுகாத்துக் கொள்ள நினைக்கிறார்கள்.

திரை விமர்சனமும், பிறபடைப்புகளும் சிறப்பாக இருந்தன. தொடர்ந்து புதியதடம் புத்துணர்ச்சியுடன் வெளிவர வேண்டுகிறேன். புதிய தடத்தில் நடைமுறைச் சொற்களைப் பயன் படுத்தி எளிமையாக வெளியிட வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். சாதியை ஒழிப்போம், சனநாயகம் படைப்போம்.

-த. குமரவேல், அ.மறவக்காடு.

த.ம.உ.க.

படிப்பகம்

www.padippakam.com



சிறுகதை

# அலையோர மயானங்கள்

பாட்டாளி

'ஏமுலெ இப்பிடி அலிவெதியெடுத்து ஓடியாற'.

வேகவேகமாக ஓடி வந்த மரிய சிலுவை தஸ்ஸூ புஸ்ஸூன்னு இளைச்சு மேல் மூச்சு வாங்க, ஒழுங்காகப் பேசக் கூட முடியாமல் திக்கித் திணறியவாறே,

'நம்ம செவத்தியான் எறாப் பண்ண மோட்டாருல மாட்டிக்கிட்டாம்!'

திடுக்கிட்ட குரூஸ் பெர்னாந்து நெஞ்சில் கைவைத்து "அட ஆண்டவரே!' ஏமுலெ அங்கெ போனீங்க?'

தொப்பல் தொப்பலாய் நனைந்து போயிருந்த சட்டையைத் தளர்த்தி காலரை மேலே தூக்கி விட்டு, டவுசருக்கு மேலே சுருட்டிக் கட்டப்பட்டிருந்த கைலியைப் பிரித்து பெருகி வழிந்து கொண்டிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு கிருதாவிலிருந்து கீழ் நோக்கி ஓடிய வியர்வைக் கோட்டையும், சட்டைக் காலரைச் சுற்றி நசநசவென்று அப்பியிருந்த வியர்வைப் பெருக்கையும் தலையைக் குனிந்து துடைத்தவாறே,

'இல்லெ மாமோ! இன்னிக்கு நெறய்யச் சாலையா வந்து மாட்டிக்கிட்டே இருந்துச்சா கவனந் தெரும்பிடிச்சு. அந்தானிக்கு அங்கிட்டுப் போயிட்டம். மோட்டாருல்ல வலை மாட்டிக்கிச்சு. செவத்தியாந்தா மொதல்ல உள்ள போனாம். ஆளெயே காங்கல. நல்லா தேடிப் பாத்துட்டம். ஆளு மோட்டாருல்ல சிக்கிக்கிட்டு செத்துப் போயிருக்கனும். குளோரி அக்காட்ட தாக்கல் சொல்லுறதுக்கு ஓடிக்கிட்டிருக்கேங்'

'நம்ம உசுரக் குடிக்க வந்த பெசாசால்ல கடலுக்குள்ள இருக்குது அது. ஆண்டவரோட அருமையான தோட்டத்துல பாவப்பட்ட பழத்தைக் கொடுத்து சாத்தான் கெடுத்த மாரியில்லா இருக்குது நெலமை. இந்த அருமையான கடக்கரையில எறாப் பண்ணெ ரூவத்துல சாத்தான் வந்துட்டுல்லா! நாமெல்லாஞ் சாவெண்டிதாங். ஓடுல வெரசா குளோரிக்கிட்ட சொல்லிப் போடு. பாவப்பட்டவெ!.

ஒரு ஒற்றை அலை கரை தொட்டுத் திரும்புவதற்குள் விரைவாய் விஷயம் பரவி 'ஈஞ்சாங் குப்பம்' முழுவதும் கூடி விட்டது. தூரத்தில் கடல் முனையைத் தொட்டுக் கொண்டிருந்த வானம் அடர்த்தியாய் இருள் கப்பிப் போயிருந்தது.

வாயிலும் நெஞ்சிலும் வயிற்றிலும் மாறி மாறி அடித்துக் கொண்டு கதறி அழுது கொண்டிருந்த குளோரியைப் பார்த்து அவளின் மூன்று பிள்ளைகளும் சேர்ந்து அழுவதும், பிறகு குப்பத்துக்காரர்கள் பேசும்போது வாய் பார்ப்பதும், குளோரியின் அழுகைச் சத்தம் பெரிதாகையில் மீண்டும் அவளோடு சேர்ந்து

படிப்பகம்

www.padippakam.com



'என்னா பாவஞ் செஞ்சமோ! ஆண்டவரு நம்மள இந்த சோதி சோதிக்காரு'

'குளோரிக்காவ நெனச்சாத்தாமுல பாவமாயிருக்கு. பொட்டப்புள்ளிங்கள வச்சுக்கிட்டு என்ன பண்ணுவா? வேறே போக்கிடம் ஏதும் இல்லியே. அந்தோணி முதலாளிட்டச் சொல்லி ஏதாவது நஷ்ட ஈடு வாங்கித் தரணும். அந்தாளு தருவாரோ?

'ஏலெ அவரு யாருன்னு நெனச்சே. நம்ம எனத்தான்லே. நம்ம அந்தோணியார் குருசடிக்கு ஆயிரம் ரூவா தாரேம்மின்னாருலே!

உப்பளம் மாதிரி பெரிய பெரிய பாத்திகளாக இருந்து இறால் பண்ணையின் ஓரமாய் கட்டப்பட்டிருந்த ஆபிஸ் ரூம் நோக்கிப் போனார்கள்.

● சூரியன் உச்சத்திலிருந்தான். உக்கிரமாய் இருந்தான். வழக்கத்தை விட அதிகமாக தனது அக்கினிக் கண்களால் அகட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். வெப்பத்தில் மணல் வெளி தகித்துக் கொண்டிருந்தது. இதையெல்லாம் சட்டை செய்யாமல் செருப்பில்லாத வெற்றுக் கால்களோடு மணலில் புதையப் புதைய ஈஞ்சாங்குப்பத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் தன்னை சட்டை செய்யாமல் நடந்து செல்வதைப் பார்த்த சூரியன் மேலும் உக்கிரம் காட்டிக் கொண்டிருந்தான்.

'கடைசி வரைக்கும் அந்தாளு நஷ்ட ஈடு தராம சமாளிச்சுப்புட்டாருல்ல! என்னமெல்லாமோ சொல்லி தெய்வக் குத்தம் தலை விதின்னு சொல்லி ரூட்ட மாத்திப்புட்டாருல்ல!

'அவரு சொல்லறது நாயந்தாமுல! தெய்வக் குத்தம்தாமுல இது. இல்லேன்னா சொர்க்கமா இருந்த ஈஞ்சாங் குப்பம் நரகமாப் போவுமா? எல்லாம் சாத்தானோட வேலே. ஆண்டவருட்ட மொறையிடுவமுலெ. அவரு காப்பாத்துவாருல்லா!

'என்ன பேச்சுல பேசுதீய. நம்ம ஆண்டவரு கொடுமையானவரா? எல்லாத்தையும் ரச்சிக்கிறவருல்லா! அவரு இப்பிடிச் செய்வாரா? வேறே மதத்துக்காரம் மாரியில்லா பேசுற!

'சும்மாயிரும்முல! எல்லாம் ஒழுங்கோ! கடலுக்குள்ள போறதுக்கு முன்னாடி குருசடிக்கு இப்பல்லாம் யாரு சுத்த பத்தமா போறா? ரவ்வு முச்சூடும் மேல விழுந்து பொரள வேண்டியது. விடியாமெ எந்திருச்சு குளிக்காமக் கொள்ளாம லாஞ்சில ஏறிட வேண்டியது. கடல் தெய்வம் கோவிச்சுக்காம கொஞ்சவால செய்யும்?

'அது நெசந்தாமுல. எங்க துடுப்புக் காலத்தில குருசடியில கால் வைக்காம வள்ளத்துல கால் வச்சது கெடயாது. சுத்த பத்தமில்லாம வள்ளத்தையே தொட மாட்டமுல்லா!

www.padippakam.com



'ஓங்காலத்தப் பத்தியே பேசாத பாட்டையா! இப்போ குளோரிக்கு என்ன வழி? அந்தோணி முதலாளிகிட்ட சண்டை போட்டாவது காசு வாங்கியிருக்கணும்முல்லா!

'ஏலெ வெறுவாக்கெட்ட மூதி! அதாஞ் சொல்லுதம்முல. அது அவா தலைவிதி. நாமென்னத்துல செய்யுறது. எல்லாம் ஆண்டவரு பாத்துப்பாரு.

'சரி முடிவா என்னதாஞ் செய்யுறது?

'முடிவா அதாம் முதலாளி சொன்னாகல்லா! முதல்ல குருசடிய உசத்திக் கட்டுவோம். ஆயிரம் ரூவா தாரேமின்னு சொன்ன முதலாளி இப்ப குருசடிய அவங்க செலவுலயே கட்டிக் கொடுத்துடறேமின்னுட்டாக! திருவிழா செலவுக்கு அவுசேப் மொதலாளிகிட்டப் போயிக் கேப்போம். சரிதானாலே.

'சரிதாமுல! அதோட நம்ம குப்பமெல்லாஞ் சேந்து வேளாங்கன்னிக்கு போய்ட்டு வருவோம். அம்மாகிட்ட நம்ம கொறயெல்லாம் சொல்லி தீத்துடச் சொல்வோம். நமக்கும் நல்ல காலம் வராமலா போயிடும். நடையை எட்டிப் போடுங்கல வெரசா!

○ வழக்கமாக மீன் லோடு ஏற்றிச் செல்லும் வேன் ஒன்றில் ஈஞ்சாங் குப்பம் பரபரத்துக் கொண்டிருந்தது. வெள்ளாவி மணக்கும் சலவைத் துணி அணிந்த ஆணும் பெண்ணும் டிரங்க் பெட்டிகளையும், கட்டு சாதங்களையும் வேனில் ஏற்றுவதும் ஏறுவதுமாய் பரபரத்துக் கொண்டிருந்தனர்

அதே சமயம் சர்ரு புர்ன்னு ஏழெட்டுக் கார்கள் கடற்கரை மணலை வாரி இறைத்துக் கொண்டு வரிசையாய் சென்று கொண்டிருந்தது.

'ஏமுலெ குரூஸ் பென்னாந்து! என்னாமுலெ அது! சர்ரு புர்ருன்னு காருக போகுது. என்னாவெஷயம்? கண்களை இடுக்கிக் கொண்டு கேட்டார் பாட்டையா.

'அதுவா நம்ம அந்தோணி முதலாளி எறாப் பண்ணைக்கு மேக்கொண்டு முன்னூறு ஏக்கரா வாங்கப் போறாராம். ஏக்கெனவே முன்னூரு ஏக்கரா இருக்குது. இதையும் சேத்து அறநூறு ஏக்கரால்ல எறாப் பண்ணை வக்கப் போறாராம். அதுக்காண்டி நெலத்தை வளைச்சுப் போடத்தாங் இப்பிடி காருல பறக்குதாவ. நேரமாட்டுதுல்லா வெரசா வேனெக் கௌப்புங்கலே!

எவ்வளவு கழுவினாலும் மீன் கவிச்சி நாத்தம் போகாத அந்த வேன் மணலை வாரி இறைத்துக் கொண்டு கிளம்பியது.

படிப்பகம்

www.padippakam.com

☞ உங்கள் கதை, கவிதை; கட்டுரை, பிற படைப்புகளை புதிய தடம் வரவேற்கிறது.

☞ சந்தா

தனியிதழ் - 8.00

ஆண்டுக்கு - 50.00 (ஆறு இதழ்கள்)

அரையாண்டு - 25.00 (மூன்று இதழ்கள்)

☞ நூல் விமர்சனம் பகுதிக்கு 1பிரதி அனுப்ப வேண்டும்.

☞ வாசிக்கும் தோழர்களின் பங்களிப்பினைக் கொண்டு மட்டுமே புதியதடம் வெளியிடப்படுகிறது. எனவே தொடர்ச்சியாக இதழ் பெற்று வருகிறவர்கள் தங்களது பங்களிப்பாக இதழுக்கான தொகை அல்லது சந்தா அளித்து உதவ வேண்டுகிறோம்.

தொடர்புக்கு

மேகவண்ணன்

**புதிய தடம்**

28B, லெட்சுமண தீர்த்தம் தெரு,

ராமேஸ்வரம் - 623 526.

படியுங்கள்

**பகிர்வு**

பயிலகத்தின் தத்துவ அரசியல் ஏடு

குமரன் தாஸ்

எண். 153, சூர்யமூர்த்தி ஆசாரி காம்பௌண்டு,

புதுச்சந்தை (வடக்கு),

காரைக்குடி-630 001.

படிப்பகம்